

வயநாடு மக்களவை தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் பிரியங்கா காந்தியை ஆதரித்து மானந்தவாடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பேசினார். அப்போது பிரியங்கா காந்தியின் உருவப் படத்தை வரைந்த மாணவனை மேடைக்கு வரவழைத்து ராகுல் காந்தி பாராட்டினார்.

'திராவிட மாடல்' அரசின் திட்டங்களின் நிலை குறித்து

# கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## இன்றும் - நாளையும் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 5-

**திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலை குறித்து கோவையில் வருகிற நவம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரு தேதி களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் கள ஆய்வு நடத்துகிறார். அதைத் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் கள ஆய்வை நடத்தப் போவதாகவும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார் கள்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில்,

"அமெரிக்கப் பயணத்திற்கு முன்பாகவே நான் கேட்டுக் கொண்டபடி, அமைச்சர்கள் பல ரும், அவரவர் துறை சார்ந்த மற்றும் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை அளித் திருந்தனர்.

எதிர்வரிசையிலே இருப்பவர் கள், திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவ தூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயி ருக்கிறார்கள்.

திராவிட மாடல் அரசு தனது திட்டங் களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம் பிக்கையுடன் உள்ள தமிழ் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், பண்டிகை நாட்கள் முடிவடைந்த பிறகு, நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன்.

மற்ற மாவட்டங்களிலும் தொடர விருக்கிறேன். **கள ஆய்வும் தொடரும், திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்!**

"அரசு சார்ந்த பணிகளை மட் டும்தான் கவனிப்பீர்களா?" என்று உடன்பிறப்புகளான உங்களின் மனக்குரலை 'உங் களில் ஒருவனான' நான் அறி வேன். கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணி களையும் ஆய்வு செய்வேன்.

கண்மணிகளாம் உடன்பி றப்பு களையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்!"

- என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்கள்.

தமது இவ்வறிவிப்புக்கொப்ப, திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக் கப்படும் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்திட கோவை யில் 5 மற்றும் 6 ஆகிய தேதி களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. மண்டலம் 1, 2, 3, 4, 8 – ஐ சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7–க்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர் முன்னிலையில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 05/11/2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | 7 | கலைஞர் அறிவாலயம், எம்.கே.மூப்பனார் சாலை, ரயிலடி அருகில், தஞ்சாவூர். |
| | மாலை 4.00 மணி | | கோகோஸ் மஹால், காவிரி தென்கரை, புதுஅக்ரஹாரம் திருவையாறு, தஞ்சாவூர். |

மண்டலம் 7 – ஐ சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 04–11–2024.

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

மக்களை வதைக்கும் நாடு முழுவதும் உள்ள

# சுங்கச்சாவடிகளை அகற்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும்!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. அழைப்பு !

சென்னை,நவ.5

தி.மு.க. மாநிலங்களை உறுப்பினர் பி.வில்சன் தமது எக்ஸ் தளத்தில் கூறியதா வது:

அக்டோபர் 2024 நிலவரப் படி, தமிழ்நாட்டில் தற் போது 64 சுங்க கட்டண சாவடிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத் தின் கீழ் செயல்பட்டு வரு கின்றன.

நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளை ஒழிப்பது தொடர்பாக நாடாளுமன் றத்தில் நான் எழுப்பிய சிறப்பு கவன ஈர்ப்பு கேள் விக்கு பதிலளிக்கையில் மத் திய இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா இந்த தகவலைத் தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நான் எழுப்பிய கேள்விகளுக்கு பதி லளிக்கும் போது அமைச்ச ருக்கு, அதிகாரிகளால் போதிய ஆலோசனைகள் வழங்கப்படவில்லை என்பது ஆச்சரியமளிக்கிறது.



அமைச்சரின் எழுத்துப் பூர்வ பதிலில், 1997 ஆம் ஆண்டின் முந்தைய தேசிய நெடுஞ்சாலை கட்டண விதி களில் அறுபது கிலோமீட்டர் தூரம் குறித்து எந்த அளவு கோலும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இது 1997 விதிகளைப் பற் றிய தவறான புரிதலைக் குறிக்கிறது. இந்த விதியானது உண்மையில் இரண்டு சுங்கச் சாவடிகளுக்கு இடையில் 80 கி.மீதூரத்தை குறிப்பிடுகிறது.

மேலும், ஒன்றிய அமைச் சர் நிதின் கட்கரி, 60 கி.மீ சுற் றளவில் சுங்கச்சாவடிகள் அனுமதிக்கப்படாது என்று நாடாளுமன்றத்தில் தவறுத லாக அறிவித்து விட்டார் என் பதை இது குறிக்கிறதா?

சென்னையில் உள்ள பர னூர் சுங்கச் சாவடியில் சாலை பயனர்களுக்கு 2008 கட்டண விதிகளின் விதி 6 இல் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ள பலன்களை மறுப் பது அநீதியானது. இது சுங்க கட்டணங்களில் 60 சதவீதம் குறைக்க அனுமதிக்கிறது, இதனால் 40 சதவீதம் குறைக் கப்பட்ட விகிதத்தில் கட்ட ணம் வசூலிக்க உதவுகிறது.

இந்திய தேசிய நெடுஞ் சாலை ஆணையமானது பர னூரில் செய்த முதலீட்டை விட ரூ.28.54 கோடி கூடுதல் இலாபம் ஈட்டியுள்ளது என் பதையும், விதிகளின்படி சுங் கக் கட்டணத்தைக் குறைக் கத் தவறிவிட்டது என்பதையும் அமைச்சர் ஒப் புக்கொள்கிறார்.

அதுமட்டுமின்றி, வசூல் செய்யப்பட்ட அதிகப்படி யான நிதியானது இந்தியா வின் ஒருங்கிணைந்த நிதியில் டெபாசிட் செய்யப்படுகிறது என்பதும், அது தேசிய நெடுஞ்சாலைகளை மேலும் மேம்படுத்துவதற்கும் விரி வாக்குவதற்கும் ஒதுக்கப்படு கிறது என்ற விளக்கமும் மிக வும் கேள்விக்குரியது.

இந்த நடைமுறையானது சுங்கச்சாவடி கட்டணம் குறித்து நிறுவப்பட்ட சட் டங்களை மீறுவதாகவும், பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவதாகவும், சாலை பயனர்களின் செல வில் ஒரு சிலருக்கு பயனளிப் பதாகவும் தெரிகிறது. மேலும், இந்த முதலீடுகள், செலவுகள் மற்றும் வசூல் களை மறுஆய்வு செய்ய சுயா தீன தணிக்கை ஆணையம் என்று எதுவும் இல்லை.

கட்டண விதிகள் பெரும் பாலும் நெகிழ்வான விதிமு றைகளுடன் ஒப்பந்தக்காரர் களுக்கு சாதகமாக உள்ளன என்பது அனைவரும் அறிந் ததே.. அதே நேரத்தில் பொது மக்கள் அத்தகைய அநீதி யான சட்டத்தின் கீழ் நியாய மற்ற தொகையை செலுத்த நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

எனவே, இந்த அநியாய மான சுரண்டலுக்கும், கொள்ளைக்கும் அஞ்சி நாம் நம் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் ஒரு நாள் வரலாம்.

இந்த நியாயமற்ற சுங்கச் சாவடி கட்டணங்களை எதிர்க்கவும், நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளை அகற்ற வும் நாம் அனைவரும் ஒன்று பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; "கலைஞர் இருக்கும்போதே, 20 ஆண்டுக் காலம் தி.மு.க.வுக்காக மு.க.ஸ்டாலின் உழைத்தார்" என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பேசியிருக்கிறாரே ?

**பட்டணம் : ஆமாமய்யா; சேலம் மாவட்டம் வீரப்பம் பாளையத்தில் நடந்த அ.தி.மு.க. செயல்வீரர் கூட்டத்தில்தான் அப்படிப் பேசியிருக்கிறார்.**

**தமிழ்நாடே, ஏன் இந்தியாவே ஏற்கனவே ஏற்றுக்கொண்ட, வெள்ளிடைமலை போன்ற உண்மையை தற்போது எடப்பாடி ஒப்புக் கொண்டு ஒப்புக்காகப் பேசியுள்ளார்.**

**தொடர்ந்து பொய்களையே பேசிக் கொண்டிருக்கிறோமே, ஒரு முறையாவது உண்மையைப் பேசினால்தான், பேசிவரும் பொய்களைக் காது கொடுத்தாவது மற்றவர் கேட்பர் என்று அவரது நப்பாசை உள்ளம் நச்சரித்திருக்கும் !**

**இப்போது முலாம் பூசி, இதுவரை அவர் உதிர்த்த மூலாதாரப் பொய்களை மறைத்துவிட முடியுமா ?**

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

# பெரம்பூர் வடக்குப் பகுதி தி.மு.க. பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கலாநிதி வீராசாமி எம்.பி., கன்னிகை கோ.ஸ்டாலின் பங்கேற்பு! பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிக்கை!

சென்னை,நவ.5-

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க மாநில இளைஞரணி செயலா ளரும் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னை வடக்கு மாவட் டம் பெரம்பூர் வடக்கு பகுதி திமுக சார்பில் பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் இன்று 05.11.2024 மாலை 6:00 மணிக்கு எஸ்.எம் மஹால் , 221,தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை, எம்.ஆர் நகர் , கொடுங்கையூர் , சென்னை 118.ல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்எல்ஏ ஆலோசனை வழங்கு கிறார் டாக்டர் கலாநிதி வீரா சாமி எம்.பி , தொகுதி பார்வை யாளர் கன்னிகை கோ.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

வட்ட செயலாளர் இரா. ஹரிதாஸ் வரவேற்புரை ஆற்று கிறார். பகுதி நிர்வாகிகள் அ.ஜியாவுதீன், இரா.லீலா வேலு, எம் லதா , வட்டச் செய லாளர்கள் கே.வி.ராஜன் , N.பார்த்திபன், மு. உமாபதி , கே.வி.செந்தமிழ் அரசு, சி.எஸ். இரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாநில நிர் வாகிகள் , செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள் , மாவட்ட நிர்வாகிகள் , மாமன்ற உறுப்பி னர்கள் , மாவட்ட பிரதிநிதிகள் , அணிகளின் அமைப்பாளர் கள் துணை அமைப்பாளர்கள் , வட்டக் கழக நிர்வாகிகள் , பாக நிலை முகவர்கள் (BLA2 ) ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றன.

பகுதி பொருளாளர் அ.செந் தூர் பாண்டியன் நன்றி கூறுகி றார்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைப் பண்பாட்டு இயக்ககம்)



"இசை, நாட்டிய, நாடக, கிராமியக் கலை விழா"



நாள்: 05-11-2024 செவ்வாய்க்கிழமை நேரம்: மாலை 5.30 மணி
இடம்: திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலையரங்கம், முத்தமிழ்ப் பேரவை, சத்யா ஸ்டுடியோ எதிரில், சென்னை - 600 028.

வரவேற்புரை : திரு. ஜி.ராமானுஜம் அவர்கள்
பொதுக்குழு உறுப்பினர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தலைமை : திருமதி. விஜயா தாயன்பன் அவர்கள்
உறுப்பினர் - செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

முன்னிலை : திரு. மயிலை த.வேலு அவர்கள்
மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்

விழாவை தொடக்கி வைத்து சிறப்புரை : மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் அவர்கள்

கலை நிகழ்ச்சிகள்

மாலை 5.30 மணி
கலைமாமணி சங்கீத கலாநிதி
முனைவர் திருவாரூர் பக்தவச்சலம் குழுவினரின்
'லய மதுரா' நாத சங்கமம்

மாலை 7.00 மணி
கலைமாமணி முனைவர் லட்சுமி ராமசாமி அவர்களின்
ஸ்ரீ முத்ராலயா வழங்கும்
"புகழொடு தோன்றுக" பரத நாட்டியம்

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!

வரவேற்கும்: M.R.M.பாலசுப்பிரமணியன்
மாவட்ட அவைத்தலைவர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.